**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி**

**OS. No.201/2023**

**06.08.2025**

**P.W.1- அலெக்ஸ்பாண்டி**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் போலியானவை மற்றும் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. நான் வழக்கறிஞராக 9 வருடங்களாக பணிபுரிந்து வருகிறேன். தற்சமயம் நான் வழக்கறிஞர் தொழிலையும், பத்திரம் எழுதுவதும் செய்து வருகிறேன். நான் வழக்கறிஞர் தொழில் செய்யவில்லை என்றாலும், பத்திரம் எழுதும் வேலை தான் செய்து வருகிறேன் என்றாலும் சரியல்ல. நிரூபண வாக்குமூலத்தில் தாவா சொத்து விஜயலட்சுமிக்கு ஆதியில் பாத்தியப்பட்டது என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி தாவா சொத்தானது எனது மாமியார் பெயரில் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். அதன்பின்பு எனது மனைவி பெயருக்கு எனது மாமியார் தானமாக மேற்படி சொத்தை கொடுத்தார் என்றால் சரிதான். அதன்பின்பு மேற்படி சொத்தை எனது மனைவியிடமிருந்து என் பெயருக்கு தானமாக பெற்றுள்ளேன் என்றால் சரிதான். எனது நிரூபண வாக்கு மூலத்தில் 1, 2 பிரதிவாதிகள் தாவா சொத்திற்கு அருகே ஆடு, மாடு வைத்து மேய்த்து வருகிறார்கள் என கூறியுள்ளது சரிதான். தாவா சொத்தினை எனது மாமியார் கிரையம் வாங்கும்போது நான் இருந்தேன். தாவா சொத்தின் நான்குமால் பற்றி தெரியுமா என்றால் தாவா சொத்து பதிவதற்கு முன்பு இடத்தை சென்று நான் பார்க்கவில்லை, எனது மாமியார் பார்த்தார். நான் எனது மனைவியிடமிருந்து பெற்ற தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் சொத்தின் நான்கு மால் விவரம் தவறாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் தானமாக பெற்ற பத்திரத்தின் வடக்கு மாலாக சர்வே எண்.191/6ல் கட்டுப்பட்ட கருப்பத்தேவர் மனைவி முத்துப்பேச்சியின் கைவசம் உள்ள சொத்தும், சர்வே

எண்.191/5ல் கட்டுப்பட்ட அரசு புறம்போக்கு ரோடும் என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். கிழக்கு மாலாக சர்வே எண்.190/5ல் கட்டுப்பட்ட வடக்குவாசல் செல்லியம்மன் கோவில் சொத்தும், சடையத்தேவர் மகன் காசி, அவரது மகன் பிரவிந்த் ஆகியோர்கள் சொத்தும், மேற்கு மாலாக சர்வே எண்.200/5, 200/6ல் கட்டுப்பட்ட கருப்பத்தேவர் மனைவி முத்துப்பேச்சியம்மாள் கைவசம் உள்ள சொத்தும், தெற்கே சர்வே எண்.192/5ல் கட்டுப்பட்ட ராஜேந்திரன் மனைவி கனி கைவசம் உள்ள சொத்தும் என காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி நான்கு மால்படி தாவா சொத்திற்கு வடக்கே மட்டும் தான் பாதை என காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். எத்தனை அடி அகல பாதை என்றால் எனக்கு சரியாக தெரியாது. மேற்படி சொத்திற்கு பாதையில்லை, ஆகையால் தான் பாதை உள்ளதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி சொத்தை அளந்து பார்ப்பதற்கு தயாரா என்றால் தயார் தான். மேற்படி சொத்தின் கிழக்கே உள்ள வடக்குவாசல் செல்லியம்மன் கோவில் வேலி போடாமல் இருந்தது. கிழக்கு பக்கம் உள்ள சொத்தில் என்ன விவசாயம் செய்யப்படுகிறது என்றால் தரிசாக உள்ளது. பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி சொத்தில் 20 அடி உயரத்தில் தென்னை மரங்கள் உள்ளன என்றால் இல்லை. தெற்கேயுள்ள ராஜேந்திரன் மனைவி கனிக்கும், எங்களுக்கும் இடையே பிரச்சினை இருந்து காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். நிரூபண வாக்கு மூலத்தில் பிரதிவாதிகள் மீது புகார் கொடுக்கப்பட்டது என பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அதுசம்மந்தாக ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நிருபண வாக்குமூலத்தில் தாவா சொத்தில் 1, 2 பிரதிவாதிகள் மற்றும் உத்தேச பிரதிவாதி பாண்டியம்மாளும் சேர்ந்து கிழமேல் 15 அடியும், தென்மேற்கு 15 அடியும் தகர செட்டி போட்டுள்ளார்கள் என பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா வழக்கில் உத்தேச பிரதிவாதி பாண்டியம்மாளுக்கு வழக்கு மூலம் இருந்தும், அவர் தாவா சொத்தல் கொட்டகை போட்டது தெரிந்தும், அவரை வேண்டுமென்றே வழக்கில் சேர்க்காமல் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளதால் எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்து ஆதியில் 1976ல் முத்துப்பேச்சியமாளுக்கு பாத்தியப்பட்டது என்றால் தெரியாது. அதன்பின்பு

தாவா சொத்தை தவசித்தேவர் மற்றும் கழுவாயிஅம்மாள் சரியான பிரதிபலனுக்காக கிரையம் பெற்றுள்ளார்கள் எனக்கு தெரியாது. மேற்படி தவசித்தேவர் இறந்தபின்பு கழுவாயிஅம்மாளும், அவரது வாரிசுதாரர்கள் சேர்ந்து பாண்டியம்மாள் (உத்தேச பிரதிவாதி) மற்றும் அவரது கணவர் ராஜேந்திரனுக்கு தாவா சொத்தை கிரையம் கொடுத்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தை கிரையம் முடிப்பதற்கு முன்பு வில்லங்கம் பார்க்கப்பட்டதா என்றால் பார்த்தேன். மேற்படி கிரைய ஆவணங்கள் வில்லங்கத்தில் காணப்பட்டதா என்றால் காணப்படவில்லை. எனது மாமியார் கிரையம் பெற்ற சொத்து விஜயலட்சுமி என்பவருக்கு அரசால் ஒப்படைப்பு செய்யப்பட்ட நிலம் என்றால் தெரியாது. மேற்படி நிலத்தை 30 ஆண்டுகள் விற்கவோ, வாங்கவோ முடியாது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி நிலம் வாங்கவோ, விற்கவோ வட்டாட்சியர் மற்றும் கோட்டாட்சியரிடம் அனுமதி வாங்கினேனா என்றால் வட்டாட்சியர் அனுமதி கொடுத்துள்ளார். வட்டாட்சியர் அனுமதி எதுவும் தரமுடியாது, வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி சொத்து சம்மந்தமாக வழங்கப்பட்ட் பட்டா சம்மந்தமாக வட்டாட்சியரை விசாரிக்க தயாரா என்றால் விசாரிக்கலாம். வழக்கிடை சொத்தை நான் தானம் பெற்றபிறகு பார்த்தேன். தாவா சொத்தை எப்போதும் அனுபவமோ, விவசாயமோ செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் உத்தேச பிரதிவாதி கடந்த 35 வருடங்களாக அனுபவத்தில் இருந்து வருவது தெரியுமா என்றால் சரியல்ல. எனது மாமியார் கிரையம் வாங்கிய பிறகு ஆக்கிரமிப்பு செய்து வருகிறார். விஜயலட்சுமிக்கு பூர்வீக சொத்து, அவர் எனது மாமியாருக்கு விற்பனை செய்துவிட்டார். அதன்பிறகு பாண்டியம்மாள் ஆக்கிரமிப்பு செய்தார். 1, 2 பிரதிவாதிகள் மற்றும் உத்தேச பிரதிவாதி தாவா சொத்தை யாருடைய எதிர்ப்பும் இன்றி கடந்த 35 வருடங்களுக்கு மேலாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. 2006ம் வருடம் விஜயலட்சுமிக்கு நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு அரசு மூலம் பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான். 1, 2 பிரதிவாதிகள் மற்றும் உத்தேச பிரதிவாதி வழக்கு சொத்தை பொறுத்து ஆக்கிரமிப்பாளர்கள் இல்லையென்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு வடமேற்கு தரிசாக உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு மேற்கே ஓடை உள்ளது என்றால் சரியல்ல. வடமேற்கில்

பிரதிவாதிகளின் வீடு மற்றும் பம்பு செட் உள்ளது என்றால் சரியல்ல. எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2025.08.06 17:37:38 +0530

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.